# தாந்தோன்றுமீசுரர்
# தோத்திரப்பாடல்



ஓம்

# தாந்தோன்றுமீசுரர் தோத்திரப் பாடல்

## த.சதாசிவம். ஆசிரியர், பளுகாமம்

## 1940ல் பாடப்பட்டது

திருச்சிற்றம்பலம்

1) ஓம் என்னும் மூன்றெழுத்தும் ஒத்தும் நிலைமோறே
உள்ளொளிய உயிர் அனைத்தும் நின்றாய் நீயே
சேமமுற ஐங்கரனாய் செனித்தாய் நீயே
சேயேனவே அரன்மடியில்லமர்ந்தாய் நீயே
கோபமுறவோர் கொம் பொடித்தாய் நீயே
கொன்றை மர நிழல்லமர்ந்த குமரன் நீயே
ஈனமறமுத்தம் ஒழனக்கீவாய் நீயே
எழில் மேவு கொக்கட்டி இலங்கும் தேவே

2) அயனோமொல்கானாத அமலமூர்த்தி
அடியவர்க்காய் பலவேடமான மூர்த்தி
செயமருவு கொக்கட்டி மரத்தின் மீதே
சிவலிங்கம் சுயம்பு வென நின்ற மூர்த்தி
உபயமலர்த்தந்தென்னை ஆள வேண்டும்
உலகெல்லாம் நிறைந்து கடந்திலங்கு மூர்த்தி
சமயம் மென்றுனை பிடித்தேனென்னை ஆள்வாய்
தருண மிது தாந்தோன்றும் தேவதேவே

3) ஆதிமதி ஆகமங்கள் தேட நின்றாய்
ஆழியீயே எளுமால மள்ளியுண்டாய்
சாதிமதம் கடந்தேகமாகி நின்றாய்
சாற்றிய தோர் துதி பலவும் ஏற்றுகந்தாய்
கோதில் கொன்றை மலர் மாலை சூடி நின்றாய்
குமரனொடு குஞ்சரனைத் தந்து நின்றாய்
சூதில் பலவரமெனக்கே துணையாய் தந்தாய்
சுயம்பு வேதாந் தோன்றும் தேவதேவே

4) இணையடியை பணியாத பாவமோ தான்
இவ்வுலகில்லென்னை வருத்த முறையாயோவென்று
துணையெனவே உனை பிடித்தேன் துய்யாய் மெய்யாய்
துன்பமெல்லாம் இன்பம் மென துலங்கவய்பாய்
கணையததால் புரமெரித்த காலகாலா
கடவுளே உனை நம்பிகடுகி வந்தேன்
பினையெனவே யென்னுள்ளத்தை ஆள வேண்டும்
பிஞ்ஞகா தாந்தோன்றும் தேவதேவே

5) ஈயாத லோபியின் கைப் பொருளே போல
இருந்திடவே வைத்தாயோ ஈதுன் செயலோ
காயாத மரமானேன் கடுவதானேன்
கருணையென்பதென்னுள்ளங்கானாதானேன்
பாயாரும் நானுமாய் பரதவிக்கும் போது
பாய் புலியின் இதமுடையாய் பரனே நீய்தான்
தாயருடன் வீடை தர வரவேனுமையா
தற்பராதாந்தோன்றும் தேவதேவே

6) உமையொரு பாகம் வைத்தாய் உரி அணிந்தாய்
உரகத்தை அங்கத்தில் ஆடவிட்டாய்
இமையவர்கள் அடி தொழவே பணித்துவயிந்தாய்
இணை இல்லா அன்பருள்ள கோயில் கொண்டாய்
அமைவுறவே நின்றமுதவந்திருக்காக
அடிபட்டாய் உதிர் பிட்டு அழகாய் உண்டாய்
சமய மீது உன்பாதம் தொழுதேன் ஐயா
சங்கரா தாந்தோன்றும் தேவதேவே

7) உடைலது கொண்டு மிக வருந்தி நின்ற
உன்னடிக்கு நள்ளிரவிற் தூது சென்றாய்
காடகத்தில் வாழ் திண்ணரு வந்து தந்த
கறியமுது செய்தே நீ காட்சி தந்தாய்
பாடகமும் கொலுசு முதற் சப்பதிக்கின்ற
பாவயிர்கள் ஆசையினால் பரதவித்தேன்
சீடனென நானிருப்பேன்னென்னை நீய் ஆள்வாய்
சிவ சிவா தாந்தோன்றும் தேவதேவே

8) எருதேறியம்மையுடனே நீ தான்
எனது இரு விழி கான வரவே வேண்டும்
மருவு மூவசையது அகல வேண்டும்
மானிலத்திலுனது தொண்டாற்ற வேண்டும்
தரும நெறி வழுவாத நிலையும் வேண்டும்
தரித்திரற்கிலை யெனா வரமும் வேண்டும்
அருளாள உனது நினை வென்றும் வேண்டும்
அப்பனே தாந்தோன்றும் தேவதேவே

9) ஏகமது அகல் நிலையும் ஞானம் வேண்டும்
எவ்வுயுரும் தன்னுயிர் போல்லிருக்க வேண்டும்
சூதமன தயடக்கி நான் ஆள வேண்டும்
சுத்த தவம் செய்திட நற் தேகம் வேண்டும்
பாதமதை மறவாத நிலையும் வேண்டும்
பரனடியார்க் கன்பு நான் செய்ய வேண்டும்
சீதமதி புனைவவனே சிவனேதா தாதா
சிவ சிவாதாந்தோன்றும் தேவதேவே

10) ஐங்கரனையைத் தொழ வென விழித்த தேவா
அந்தகனை மாழவே யுதைத்த பாதா
வெங்கனை யாற் திரிபுரத்தையெரித்த தா நீ
விழி மலர் பறித்தாழியீந்த போதா
பொங்கு மத வாரணத்தையுரித்தே போர்த
பொன்னொழியே வெண்ணூல் சேர் புயனே வாவா
செங்கண் மால் மமதை தீர்த்தாண்ட கோவே
சீர் பெருகு தாந்தோன்றும் தேவதேவே

11) ஒன்றானாய் பலவானாய் ஒன்றுமில்லா
உலகமெல்லாம் தானாகி நின்றதேவே
அன்றாலின் நிழலமர்ந்து ஐவர்கட்கும்
அருமறையை ஓதி வைத்தவனும் நீயே
மன்றுள் நடம் செய்திடு பொற் பாதன் நீயே
மண்ணகத் தோர் வாழத் தான் தோன்றியானாய்
என்னாளுமுனை துதித்தே னென் முன் வாவா
ஈஸ்பரா தாந்தோன்றும் தேவதேவே

12) ஓங்கு பெருஞ் சுடருள் ளொளியும் நீயே
உலகத்துட்சராட்சரத்து உயிரும் நீயே
ஏங்க வீட்டவனும் நீ அலைபவனும் நீயே
ஏகம்களைபவனும் களைந்தோனும் நீயே
இங்கெழு நற்சிந்தனை நீ முடிவும் நீயே
எல்லாமாய் எங்குமாய் நின்றாய் நீயே
பாங்கு பெறும் நீயும் நான் நானும் நீயே
பராபரா தாந்தோன்றும் தேவதேவே

13) ஒளவியமே பேசி நான் திரியா வண்ணம்
அடிமை எனைத் தடுத்து நீ ஆள வேண்டும்
செவ்விய நன் நிலையருளுஞ் சிவனேயுந்தன்
சீர் பாத சேவையே தினமுஞ் செய்ய
தெய்வருடன் பொரும் போதென்னுடனே நின்று
தெய்வமே செயந்தரவே வேண்டுமையா
கவ்விய நோய் பிணி பல துமகற்ரி ஆள்வாய்
கங்காளா தாந்தோன்றும் தேவதேவே

14) அக்கமது பெருக்கி மிக வாழவேண்டும்
அடுத்து வரும் துன்பமெல்லாம் அகற்ர வேண்டும்
பக்குவியாய் வயது நூற்றிருபதுவும் வேண்டும்
பாவயர்கள் மயலது தான் மாற வேண்டும்
இக்கணமே நூற்பமதி புண்ய தேகம்
இலங்கு நின் எழில் கண்டு இறைஞ்ச வேண்டும்
செக்கர் நிற மேனியனே சிவனே வாவா
சிவசிவா தாந்தோன்றும் தேவதேவே

15) துக்கமது நீக்கமுறத் தூய்மை சான்ற
தொன்மை நெறி வருவாத அன்பர் மேவி
பக்குவத்தைக் காட்ட லெப்போபரமானந்த
பாய்கியமே ஆக்கியருள் பரந்து நாளும்
தக்க செயலாற்றியருட்டண்மை காட்டி
தவமுயர் நிலைகளைல்லாம் காட்ட லெப்போ
அக்கரவம் சடைசூடும் அந்தாபத்தர்
அண்டி நிற்கும் தான்தோன்றும் தேவதேவே

16) கங்கை திங்கள் சடைதனிலே கலந்து தோன்றும்
காதில் வெண்குழை தொங்கும் காட்சி தோன்றும்
அங்கமதில் அணிந்திலங்கும் பூதி தோன்றும்
ஆடரவம் அம்புயத்திலசைந்து தோன்றும்
செங்கை தனில் அங்கிமழு மானும் தோன்றும்
சோந்து திரி சூலமது சிறந்து தோன்றும்
பொங்கு புலித்தோல் ஆடை பொலிந்து தோன்றும்
பூவடி தா தாந்தோன்றும் தேவதேவே

17) பச்சை நிறப் பாவையுமை பாகா வாவா
பாதிமதி சடையணியும் பரனே வாவா
நச்சரவம் நின்று தவழ் மார்பா வாவா
நயனமொரு மூன்றுடைய நாதா வாவா
இச்சணமே எருதேறி என்முன் வாவா
இருவிழி கண்டுனை இறைஞ்ச இறைவா வாவா
இச்சையுடனுன்னடியே தரவே வாவா
ஏகனே தாந்தோன்றும் தேவதேவே

18) தீஞ்சுவையே செங்கரும்பே தித்திப்பான
தெய்வ மகா வரண் மணியே தேனே பாகே
வாஞ்சையுள மெய்யடியார் வாழ்வேயெந்தாய்
வகையொன்றும் மில்லாத கலங்குகின்றேன்
நீந்திடுவார் மெய்ஞான வாழ்வீலன்பர்
நெறி காணேன் நிலைகாணேன் நியதி காணேன்
நான் சைவ சமய வழி காட்டி வைக்க
நலம் எப்போ தாந்தோன்றும் தேவதேவே

19) ஓட்டனாய் உருமாறி மதுரையேகி
ஓலமிடும் வந்திக்கு உதவியாக
கட்டுடைத்துக் கடல் வெள்ளம் போலெழும்பி
கரைபுரண்டு ஓடும் வைகை தனை மறிக்கப்
பிட்டுண்டு மண்சுமந்த பிசகுகாகப்
பிரம்படிபட்டுடன் மறைந்த பித்தாபாசக்
கட்டவிழ்து கரந்தந்து காப்பதெப்போ
கடவுளே தாந்தோன்று ம் தேவதேவே

௨௦) மண்ணிதனில் பிறந்து முதற் பிழைகள் செய்து
மாபாவியாக மதி மயங்கியின்று
கண்ணிரண்டுமில்லாத குருடன் பாதை
காணாது நின்று ததி கெடுதல் போல
எண்ணியெண்ணி உனை நினைந்து உருகும் ஏழை
எனைக் காப்பதுன் கடமையிலலையாமே
நண்ணி வந்தேனுன் பதிக்கு நாயேனுக்கோர்
நல்வீடைதா தாந்தோன்றும் தேவதேவே

௨௧) பத்தரும் முத்தரும் தேடி பணியும் லிங்கம்
பரவைக்குத்திரு தூது போனலிங்கம்
நித்தியனாய் நிற்குணனாய் நிறைந்த லிங்கம்
நீடாழியுலிகெல்லாம் நின்றலிங்கம்
முத்தி நெறி காட்ட வல்ல மூர்த்தி லிங்கம்
முழு முதலாய் முடிவில தாய் முதிர்ந்த லிங்கம்
சித்தனாய் உருமாறி ச் செனித்த லிங்கம்
சிவலிங்கம் தாந்தோன்றும் தேவதேவே

௨௨) இந்திரனுக் கருஞ் சாபந்தீர் துவைத்தாய்
ஈராறு கரத் தோனை இரங்கியீந்தாய்
மந்திரியாய்ப் பன்றிகளை மாற்றி வயித்தாய்
மாயமாய் வந்த பசு தனையும் மாய்தாய்
தொந்தி வயிற்றைங் கரனைத்துணையாய் தந்தாய்
தோகையுமை தன்னையிடப் பாகம் கொண்டாய்
நந்தி வாகனமேறும் நடன பாதா
நாடினேன் தாந்தோன்றும் தேவதேவே

௨௩) இப்பிறவிக் கடல் தாண்டத் தெப்பம் போலே
இவ்வேளை வந்தெனக்கு உதவ வேண்டும்
கொப்பரையில் நின்று கொதி கொள்ளும் மென்னெய்
கொப்பாக வென்னுள்ளம் கொதிக்கலானேன்
தப்பிதம் மெல்லாம் பொறுத்து தாங்கும் தேவா
தமியேனை ஆள் கொண்டு அருளவேண்டும்
ஒப்பில்லா ஒளி பிளம்பாய் ஓங்கும் ஞான
தீச் சுடர் தாந்தோன்றும் தேவதேவே

24) நம்பு மடியார் வினை நீக்கும் சகாயன்
ஞானமே உருவாக நிறைந்த தூயன்
உம்பர் முதலுயிரனைத்தும் துதிக்கு மெய்யன்
ஊழ்வினையெல்லாம் மழித்து அருளுமய்யன்
அம்பிகை தனக்கு கந்த அரிய நேசன்
ஆபத்திலுத வீதருமபயக்கையன்
நம்பனெனத் திரு நாமம் கொண்ட நாதா
நாடினேன் தாந்தோன்றும் தேவதேவே

25) உய்யவேறுற்ர துணை உன்னையன்றி
உலகத்தில் வேறெதுவும் உள்ளதாமோ
ஐயனே அடிமையெயை அன்பாக
ஆளாக்கி எடுப்பது மக்கருமையாமோ
செய்ய வெண்ணீற்றி னொளி நுதலேயெனைச்
சேயனாய்ச் சேர்த்திடாதிருக்கலாமோ
மெய்யன்பனாக்கி யெனை மகிழ வைப்பாய்
விமலனே தாந்தோன்றும் தேவதேவே

26) பார்தவிடமெங்கிலும் நிறைந்த ஈசன்
பக்தர் உடன் கூடியுறவாடு நேசன்
கோர் கொன்றை மலர் மாலை கமழுல்லாசர்
கொக்கட்டி மாநகரக் கோயில் வாசன்
பார்தனுக்குப் பாசுபதம் மீந்தவையன்
பகையரக்கர் குலம் மறுத்துப் பணிந்தாசன்
சோதிவொய் சேவடிக் கீழ் சிறியேனெனை
செம்மலே தாந்தோன்றும் தேவதேவே

27) வல்வினை னோய் வந்தென்னை வருத்துதையோ
வழியறியேன் இதை விலக்கும் வகையும் காணேன்
தொல்லை பலவும் தொடர்ந்து துணை தாறித்தேன்
துடியாகத் துடித்து நித்தம் துயரத்தாலே
அல்லல்லுற்று அலைகின்றேன் அடியேனெனை
அருள் தந்து ஆள்கொள்ள வேண்டும் போதே
தில்லை தனில் திருநடனம் புரிந்து நகை
திருமேனியே தாந்தோன்றும் தேவதேவே

28) எவ்விடரு மெனையனுகாதிருக்க வேண்டும்
ஏழைகளுக்குகில்லையெனா இதயம் வேண்டும்
அவ்வியமில்லாதமன அன்பு வேண்டும்
ஆதரவாய் அன்பர் பணி ஆற்ற வேண்டும்

கவ்விய முன் கண்ம வினை கறைய வேண்டும்
காலமெல்லாமு நினைவில் கழிய வேண்டும்
தெவ்வாவந்தெனைய னு காதகல வேண்டும்
தேர்மிசை யூர் தாந்தோன்றும் தேவதேவே

29) ஊழ்வினையாலுடலமது தளர்தேனையோ
உன்நினைவே இல்லாத உலுத்தானானேன்
வாழ்வீற்கோர் வழிகாட்ட வேண்டுமையா
வழுவாமல் உன்னடியே தொழவும் வேண்டும்
ஆழ் கடல் சூழ் அவனி தனிலனுவானாலும்
அசையாதுன் அனுமதி யொன்றில்லையானால்
தாழ் பணிந்தேனனெனாளும் தருணம் தன்னீ
தாங்கிய ருள் தாந்தோன்றும் தேவதேவே

30) வெள்ளியம்பலத்தில் நடம் செய்தபாதா
வேடனாய் வீசயனுடன் பொருத வேதா
நள்ளிருளில் சுந்தரக் காய் நடந்த தூதா
நால்வேதத்துட பொருளாய் நிறைந்த நாதா
வெள்வீடையீலேறி வரும் வீமல நாதா
வேண்டுமெனக் குன்வீடை தான் தரலாகாதா
துள்ளி வந்தேனுன் பதிக்குத் துணையே நாதா
தூமணியே தாந்தோன்றும் தேவதேவே

31) ஆற்றிலடியுண்டலையும் துரும்பதானேன்
ஆதாரமற்றபடர் கொடியதானேன்
சேற்றிடையீல் நட்ட தொருகம்பமானேன்
சேடன் வாய் பட்டலறும் தேரையானே
மாற்றான் கையுற்ற முடி மன்னனானேன்
மாதாவின் முகம் கானா மதலையானேன்
கூற்றுவன் வந்தென்னுயீர் கொள முன்னாளுந்தன்
காட்சியருள் தான்தோன்றும் தேவதேவே

32) முனசெய்த பீழை முழுதும் பொறுப்பாய் போற்றி
முத்திநெறி தரும் மூலப் பொருளே போற்றி
என்கண்ம வீனைகளையும் மறைவாய் போற்றி
ஏகாம்பரமேவீ இருந்தாய் போற்றி
அன்னை தந்தை சுற்ற மெலாம் ஆனாய் போற்றி
அணையாத அருள் ஞானச் சடரே போற்றி
தன்னிகரில்லாத திருதலைவா போற்றி
தாந்தோன்றும் ஈசுபரனே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்



பழைய புத்தகங்கள் தூந்து போகா வண்ணம்
அச்சகத்தில் அடிபித்து. பரப்புகிறார் இவர்.

*ந.மா. கேதாரப்பிள்ளை.*
*முதலைக்குடா*
*இவர் ஒரு வைத்தியர் ஆவார்.*

**விலை —30/**

ஜெஸ்கொம் - மட்டக்களப்பு -2223822